FIRST CATECHISM

OF

TAMIL GRAMMAR

BY THE REV. G. U. POPE, D. D.

இலக்கண வினவிடை

முதற் புத்தகம்

இது

ஜி. யூ. போப்பையரால்

இயற்றப்பட்டது

IRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

RAS ALLAHABAD CALCUTTA RANGOON COLOMBO

1915

C. L. S. PRESS, MADRAS
1915

POPE'S FIRST CATECHISM

OF

TAMIL GRAMMAR

இலக்கண நூற் சுருக்க வினாவிடை

முதலாவது,

எழுத்ததிகாரம்

I. எழுத்தியல்

1. — தமிழ்ப்பாஷையின் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

உயிரெழுத்து, மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்று நான்கு வகைப்படும்.

2. — உயிரெழுத்து எவை?

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ இப்பன்னிரண்டும் உயிரெழுத்தாம்.

3. — இவைகளில் குற்றெழுத்து எவை?

அ, இ, உ, எ, ஒ இவ்வைந்தும் குற்றெழுத்தாம்.

4. — நெட்டெழுத்து எவை?

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ் வேழும் நெட்டெழுத்தாம்.

5. — சுட்டெழுத்து எவை?

அ, இ, உ இம்மூன்றும் சுட்டுப்பொருள் உணர்த்திவரின், சுட்டெழுத்தாம்.

[உதாரணம்.] அவன், இவன், உவன்; அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்.

6. — வினாவெழுத்து எவை?

ஆ, எ, ஏ, ஓ என்னும் உயிரெழுத்துக்களும், யா என்னும் உயிர்மெய் யெழுத்தும், வினாப்பொருள் உணர்த்திவரின், வினாவெழுத்தாம்.

(உ-ம்.) அவனா, எவன், ஏது, அவனே, அதுவோ, யாவை.

7. — மெய்யெழுத்து எவை?

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் இப்பதினெட்டும் மெய்யெழுத்தாம்.

8. — இவற்றுள் வல்லெழுத்து எத்தனை?

க், ச், ட், த், ப், ற் என வல்லெழுத்து ஆறும்.

9. — மெல்லெழுத்து எத்தனை ?

ங், ஞ், ண், ந், ம், ன் என மெல்லெழுத்து ஆறும்.

10. — இடையெழுத்து எத்தனை ?

ய், ர், ல், வ், ழ், ள் என இடையெழுத்து ஆறும்.

11. — ஆய்தம் ஆவது என்ன ?

சிலவிடத்தில் உயிர்போலவும், சிலவிடத்தில் மெய்போலவும் ஒலித்து, உயிருமாகாமல் மெய்யுமாகாமல், தனிநிலையாய் வருகிற ஓர் எழுத்தாம்.

அதின் வடிவு ஃ.

12. — உயிர்மெய்யெழுத்து எவை ?

உயிரும் மெய்யும் கூடி வழங்குகிற கம்முதல் னௌ ஈறாக உள்ள உகரூ-ம் உயிர்மெய்யெழுத்தாம்.

13. — குற்றியல் உகரம் என்பது யாது ?

மொழிகளின் கடையில் தனிக்குறில் ஒழிந்த மற்றைய எழுத்துக்களின் பின் வல்லெழுத்தை ஊர்ந்துவரும் உகரம் குற்றியலுகரம் என்னப்படும்.

(உ-ம்.) நாகு, இஃது, வரகு, எழுத்து, குரங்கு, சால்பு.

14. — குற்றியல் இகரம் என்பது யாது?

வருமொழி முதலில் யகரம் வரின், நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட, அவ்விடத்து இகரம் தோன்றும்: அந்த இகரம் குற்றியலிகரம் எனனப் படும்.

(உ-ம்.) செய்வது + யாது = செய்வதியாது.

II. எழுத்துப்புணரியல்

---

15. — புணர்ச்சி ஆவது யாது?

நிலைமொழி யீறும் வருமொழி முதலும் ஒன்றுபடப் புணர்வதாம்.

16. — அப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்?

இயல்புப்புணர்ச்சி விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

17. — இயல்புப்புணர்ச்சி ஆவது யாது?

நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வது இயல்புப் புணர்ச்சியாம்.

(உ-ம்.) பொன் + மணி = பொன்மணி.
நிலம் + வலிது = நிலம்வலிது.

18. — விகாரப்புணர்ச்சி ஆவது யாது?

யாதானும் ஒரெழுத்துத் தோன்றவும் ஒரெழுத்து மற்றொன்றாகத் திரியவும் உள்ள எழுத்துக் கெடவும் மொழிகள் புணர்வது விகாரப்புணர்ச்சியாம்.

19. — அவ்விகாரம் எத்தனை வகையாம்?

மேற்சொல்லியபடியே தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகையாம்.

(உ-ம்.) வாழைப்பழம்; பொற்குடம்; மரவேர்.

20. — உயிரெழுத்துக்குப்பின் உயிர்வந்தால் எவ்விதமாய் விகாரப்படும்?

இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்களுக்குப்பின் உயிர்வந்தால், இடையிலே யகரமெய் தோன்றும்.

(உ-ம்.) மணி + அழகு = மணியழகு.
நீ + அணை = நீயணை.
மலை + அருவி = மலையருவி.

ஏகாரத்திற்குப்பின் உயிர் வந்தால், சிலவிடத்தில் வகரமும் சிலவிடத்தில் யகரமும் தோன்றும்.

(உ-ம்.) சே + ஏறி = சேவேறி.
நீயே + அவன் = நீயேயவன்.

மற்ற உயிருக்குப்பின் உயிர் வந்தால், வகரம் தோன்றும்.

(உ-ம்.) மக	+	அரிது	=	மகவரிது.
ஆ	+	உரிஞ்சி	=	ஆவுரிஞ்சி.
திரு	+	உளம்	=	திருவுளம்.
பூ	+	அழகிது	=	பூவழகிது.
நொ	+	அழகா	=	நொவ்வழகா.
கோ	+	இல்	=	கோவில்.
கௌ	+	அழகிது	=	கௌவழகிது.

21.—உயிரெழுத்துக்குப்பின் க், ச், த், ப் வரின் எவ்விதமாம்?

உயிரெழுத்துக்குப்பின் வரும் க், ச், த், ப் பலவிடத்தில் இரட்டிக்கும்.

(உ-ம்.) மற்ற	+	காரியம்	=	மற்றக்காரியம்.
இந்த	+	சத்தம்	=	இந்தச்சத்தம்.
இனி	+	தருவேன்	=	இனித்தருவேன்
அந்த	+	பொருள்	=	அந்தப்பொருள்.
அவனுக்கு	+	கொடுத்தான்	=	அவனுக்குக்கொடுத்தான்.

22.—ய், ர், ழ் என்னும் மெய்யெழுத்துக்களுக்குப்பின் க், ச், த், ப் வரின் எவ்வாறும்?

ய், ர், ழ் என்னும் எழுத்துக்களுக்குப்பின் க், ச், த், ப் வரின், அவை பெரும்பாலும் இரட்டிக்கும்.

(உ-ம்.) போய்	+	சொன்னான்	=	போய்ச்சொன்னான்.
கார்	+	பருவம்	=	கார்ப்பருவம்.
வீழ்	+	தூண்	=	வீழ்த்தூண்.

23. — தனிக்குறிலைச் சார்ந்த மெய்யெழுத்துக்குப்பின் உயிர்வந்தால் எவ்வாறும் ?

அந்த மெய்யெழுத்து இரட்டிக்கும்.

(உ–ம்.) மண் + அழகு = மண்ணழகு.

24. — மெல்லெழுத்து எப்பொழுது இரட்டிக்கும் ?

குற்றெழுத்தைச் சேர்ந்த யகரத்திற்குப் பின்னும் தனி ஐகாரத்திற்குப் பின்னும் மெல்லெழுத்து இரட்டிக்கும்.

(உ–ம்.) செய் + நன்றி = செய்ந்நன்றி.
கை + மாற்று = கைம்மாற்று.

25. — மொழியீற்று மகரம் எப்பொழுது திரியும் ?

மொழியீற்று மகரம் ககரம் வரின், ஙகரமாம்.

(உ–ம்.) மனம் + களித்தது = மனங்களித்தது.

சகரம் வரின், ஞகரமாம்.

(உ–ம்.) மரம் + சாய்ந்தது = மரஞ்சாய்ந்தது.

தகரம் வரின், நகரமாம்.

(உ–ம்.) மனம் + தளர்ந்தது = மனந்தளர்ந்தது.

நகரம் வரின், நகரமாம்.

(உ–ம்.) செம் + நெல் = செந்நெல்.

சிலவிடத்துக் கெடுவதும் உண்டு.

(உ–ம்.) மனம் + நலம் = மனநலம்.

26. — மொழியீற்று ணகரம் எப்பொழுது திரியும்?

மொழியீற்று ணகரம் ககர, சகர, பகரங்கள் வரின், டகரம் ஆகும்.

(உ-ம்.) மண் + குடம் = மட்குடம்.
மண் + சாடி = மட்சாடி.
மண் + பானை = மட்பானை.

27. — மொழியீற்று னகரமும் லகரமும் எவ்வாறு திரியும்?

மொழியீற்று னகரமும் லகரமும் ககர, சகர, பகரங்கள் வரின், றகரமாய்த் திரியும்.

(உ-ம்.) பொன் + குடம் = பொற்குடம்.
பொன் + சாடி = பொற்சாடி.
பொன் + பானை = பொற்பானை.
கல் + கூடம் = கற்கூடம்.
விரல் + சிறிது = விரற்சிறிது.
விரல் + புறம் = விரற்புறம்.

28. — மொழியீற்று ளகரம் ககர, சகர, பகரங்கள் வரின், எவ்வாறாம்?

மொழியீற்று ளகரம் ககர, சகர, பகரங்கள் வரின், டகரமாம்.

(உ-ம்.) முள் + கூர்மை = முட்கூர்மை.
கள் + சொரிந்தான் = கட்சொரிந்தான்.
முள் + புறம் = முட்புறம்.

29. — மொழியீற்று லகரம் மகரம் வரின், எவ்வாறும்?

மொழியீற்று லகரம் மகரம் வரின், னகரமாம்.

(உ-ம்.) கல் + மலை = கன்மலை.

30. — மொழியீற்று ளகரம் மகரம் வரின், எவ்வாறும்?

மொழியீற்று ளகரம் மகரம் வரின், ணகரமாம்.

(உ-ம்.) முள் + முடி = முண்முடி.

31. — ணகரத்திற்கும் னகரத்திற்கும் பின் வரும் தகரம் எவ்வாறும்?

ணகரத்திற்கும் னகரத்திற்கும் பின் வரும் தகரம், முறையே டகரமாகவும், றகரமாகவும் திரியும்.

(உ-ம்.) கண் + திறந்தது = கண்டிறந்தது.
பின் + தொடர்ந்தது = பின்றொடர்ந்தது.

32. — ணகரத்திற்கும் னகரத்திற்கும் பின் வரும் நகரம் எவ்வாறும்?

ணகரத்திற்கும் னகரத்திற்கும் பின் வரும் நகரம் முறையே ணகரமாகவும், னகரமாகவும் திரியும்.

(உ-ம்.) கண் + நெடிது = கண்ணெடிது.
பின் + நெடிது = பின்னெடிது.

33. — லகரமும் தகரமும் புணரும்பொழுது, எவ்வாறும்?

லகரமும் தகரமும் புணரும்பொழுது, இரண்டும் றகரமாம்.

(உ-ம்.) கடல் + திரை = கடற்றிரை.
வில் + தழும்பு = விற்றழும்பு.

ஒரு றகரம் கெடுதலும் உண்டு.

(உ-ம்.) பால் + தீது = பாறீது.

34. — லகரமும் நகரமும் புணரும்பொழுது, எவ்வாறும்?

லகரமும் நகரமும் புணரும்பொழுது, இரண்டும் னகரமாம்.

(உ-ம்.) கல் + நன்று = கன்னன்று.
நல் + நெறி = நன்னெறி.

ஒரு னகரம் கெடுதலும் உண்டு.

(உ-ம்.) விரல் + நீண்டது = விரனீண்டது.

35. — ளகரத்திற்குப்பின் தகரம் வரின், எவ்வாறும்?

ளகரத்திற்குப் பின் தகரம் வரின், அவை இரண்டும் டகரமாகும்.

(உ-ம்.) முள் + தீது = முட்டீது.

ஒரு டகரம் கெடுதலும் உண்டு.

(உ-ம்.) நாள் + தோறும் = நாடோறும்.

36. — ளகரமும் நகரமும் புணரும்பொழுது, எவ்வாறும்?

ளகரமும் நகரமும் புணரும்பொழுது, இரண்டும் ணகரமாம்.

(உ–ம்.) முள் + நுனி = முண்ணுனி.
கள் + நாற்றம் = கண்ணாற்றம்.

ஒரு ணகரம் கெடுதலும் உண்டு.

(உ–ம்.) அருள் + நலம் = அருணலம்.

37. — தனிக்குறில் அணையாத ணகரத்திற்குப் பின்னும், னகரத்திற்குப் பின்னும் மொழிமுதல் நகரம் எவ்வாறும்?

ணகரத்திற்குப் பின்னும் னகரத்திற்குப் பின்னும் மொழிமுதல் நகரம் கெடும்.

(உ–ம்.) கவண் + நெடிது = கவணெடிது.
கலன் + நெடிது = கலநெடிது.

38. — மொழியீற்றுக் குற்றியலுகரம் உயிரெழுத்துக்குமுன் எவ்வாறும்?

மொழியீற்றுக் குற்றியலுகரம் உயிரெழுத்துக்குமுன் கெடும்.

(உ–ம்.) காடு + அலர்ந்தது = காடலர்ந்தது.

39. — வேறே விகாரமும் உண்டோ ?

பல விகாரங்களும் உண்டு.

(உ-ம்.) பனை + காய் = பனங்காய்.
அரசு + கோடு = அரசங்கோடு

என வருவனவாம்.

இரண்டாவது,

சொல்லதிகாரம்

40. — தமிழ்ச்சொற்களெத்தனைவகையாம்?

பெயர், வினை, இடை, உரி என்று நான்கு வகையாம்.

41. — பெயர்ச்சொல் ஆவது என்ன ?

பொருளின் பெயரைக் காட்டுவது பெயர்ச்சொல்லாம்.

(உ-ம்.) தேவன், நரகம், மரம், வீடு, நன்மை.

42. — வினைச்சொல் ஆவது என்ன ?

பொருளின் தொழிலைக் காட்டுவது வினைச்சொல்லாம்.

(உ-ம்.) நட, இருத்தல், வாசிக்கிறேன்.

43. — இடைச்சொல் ஆவது என்ன?

தனித்து வழங்குதலின்றிப் பெயர் வினைகளை அடுத்துவருவது இடைச்சொல்லாம்.

(உ-ம்.) அதுவே என்பதில் ஏ என்பதும்; அவனு மிவனும் என்பதில் உம் என்பதும் இடைச்சொற்களாம்.

44. — உரிச்சொல் ஆவது என்ன?

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் தழுவி, அவைகளுக்குரிய குணத்தைக் காட்டுவது உரிச்சொல்லாம்.

(உ-ம்.) 'பெரிய அரசன்.' இதில் பெரிய என்பது அரசன் என்னும் பெயரைத் தழுவிய உரிச்சொல்லாம்.

'மிகவும் உழைத்தான்.' இதில் மிகவும் என்பது உழைத்தான் என்னும் வினையைத் தழுவிய உரிச்சொல்லாம்.

I. பெயரியல்

---

45. — பெயர்ச்சொல்லில் எத்தனை பொருளை அறியவேண்டும்?

பெயர்ச்சொல்லிலே திணை, பால், இடம், வேற்றுமை என நான்கு பொருளை அறியவேண்டும்.

46. — திணையாவது என்ன?

திணை என்பதற்குக் குலம் என்று அருத்தமாம்.

அது உயர்திணை என்றும் அஃறிணை என்றும் இருவகையாம்.

மக்கள், தேவர், நரகர் உயர்திணையாம்.

மற்றப் பொருள்கள் எல்லாம் அஃறிணையாம்.

47. — பால் என்பது எத்தனை வகையாம்?

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்துவகையாம்.

(உ-ம்.) உயர்திணை. { ஆண்பால் ......மனிதன். / பெண்பால்......மனைவி. / பலர்பால் ......மனிதர்கள். }

அஃறிணை. { ஒன்றன்பால்...மரம். / பலவின்பால் ...வீடுகள். }

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய இம்மூன்றும் ஒருமை என்னப்படும்.

பலர்பால் பலவின்பால் ஆகிய இவ்விரண்டும் பன்மை என்னப்படும்.

48. — இடமாவது என்ன ?

இடம் என்பது தானம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகையாம்.

(உ-ம்.) (க) தன்மை.... { ஒருமை: நான், அடியேன். பன்மை: நாம், நாங்கள்.

(உ) முன்னிலை. { ஒருமை: நீ. பன்மை: நீங்கள்.

(ங) படர்க்கை.. { ஒருமை: அவன், அவள், வீடு. பன்மை: அவர்கள், மரங்கள், நிலங்கள்.

49. — வேற்றுமையாவது என்ன ?

பெயர்ப்பொருளை வேறுபடுத்துவதேயாம். அது எட்டு வகைப்படும்.

50. — முதல் வேற்றுமை எது ?

பெயரின் இயல்பே முதல் வேற்றுமையாம். அது எழுவாய் எனவும் படும்.

51. — இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன ?

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதேயாம்.

(உ-ம்.) மனிதனை ; தந்தையை ; மரத்தை; வீட்டை.

52. — மூன்றும் வேற்றுமையின் உருபு என்ன?

மூன்றும் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன் என்பவையாம்.

(உ–ம்.) மரத்தால்; மனிதனுன்; அரசரொடு; தோழரோடு; அவருடன்.

53. — நான்காம் வேற்றுமையின் உருபு என்ன?

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதேயாம்.

(உ–ம்.) தந்தைக்கு; வீட்டுக்கு.

54. — ஐந்தாம் வேற்றுமையின் உருபு என்ன?

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன், நின்று, இருந்து என்பவையாம்.

(உ–ம்.) தந்தையில்; வீட்டின்; மரத்தினின்று; பட்டணத்திலிருந்து.

55. — ஆறும் வேற்றுமையின் உருபு என்ன?

ஆறும் வேற்றுமையின் உருபுகள்

அது, ஆது; அ, உடைய என்பவை யாம்.

(உ-ம்.) *தந்தையது கை; தனது தலை; தன கைகள்; தந்தையுடைய கட்டளை.*

56. — ஏழாம் வேற்றுமையின் உருபு என்ன?

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், இடத்தில், கண் முதலியவை யாம்.

(உ-ம்.) *அவனில்; தந்தையினிடத்தில்; மரத்தின் கண்.*

57. — எட்டாம் வேற்றுமையின் உருபு என்ன?

எட்டாம் வேற்றுமையின் உருபு கள் ஏ, ஆ முதலியவாம்.

அது விளிவேற்றுமை என்றுஞ் சொல்லப்படும்.

(உ-ம்.) *மனிதனே; அண்ணா.*

58. — இவ்வேற்றுமைகள் இன் சாரியைப் பெறுவோ?

முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தவிர, மற்ற வேற்று மைகள் இன் சாரியைப் பெறும்.

(உ-ம்.) *தந்தையினை; கையினால்; சோற்றிற்கு; பசுவினது; வீட்டின்கண்.*

59. — மகரவீற்றுச் சொற்கள் எவ்வாறு வேற்றுமைப்படும்?

மகரவீற்றுப் பெயர்ச் சொற்கள் வேற்றுமைப் படும்பொழுது, அம் என்பது கெட, அத்துச் சாரியைப் பெறும்.

(உ-ம்.) மரம்...மரத்தை; மரத்தால்.

60. — எல்லாம் என்பது என்ன சாரியைப் பெறும்?

எல்லாம் என்பது அற்றுச் சாரியையும் உருபின்மேல் உம்மும் பெறும்.

(உ-ம்.) எல்லாவற்றையும்.

61. — நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றுகர மொழிகளிலே அவ்வுகரம் ஏறிநின்ற டகர, றகர மெய்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் எவ்வாறும்?

அவை பெரும்பாலும் இரட்டும்.

(உ-ம்.) ஆடு ...... ஆட்டை; ஆட்டுக்கால்.
சோறு ... சோற்றை; சோற்றுச் சுவை.
உதடு ...... உதட்டை; உதட்டு நோய்.
கயிறு ...... கயிற்றை; கயிற்றுப் பின்னல்.

சிறுபான்மை ககர தகர மெய்களும் இரட்டும்.

(உ-ம்.) வெருகு ...... வெருக்குக்கண்.
எருது .... எருத்துத்தோல்.

62. — உயர்திணைப் பன்மைப்பாலின் விகுதிகள் எவை ?

பன்மைப்பாலின் விகுதிகள் அர், ஆர், கள், மார் என்பவையாம்.

(உ—ம்.) குழையர்; குழையார்; மனுக்கள்; குருமார்; குழையரை; குழையரால்; மனுக்களுக்கு; குருமாருக்கு.

63. — மேற்சொல்லிய வேற்றுமைகளைக் காட்டிய அட்டவணையைச் சொல்லு.

	ஒருமை.	பன்மை.
க.	தந்தை.	தந்தைகள்.
உ.	தந்தையை.	தந்தைகளை.
௩.	தந்தையால்—யான்—யோடு—யுடன்.	தந்தைகளால்.
ச.	தந்தைக்கு.	தந்தைகளுக்கு.
ரு.	தந்தையில் — யின் — யிலிருந்து—யினின்று.	தந்தைகளில்.
சு.	தந்தையினது—யினுடைய.	தந்தைகளினது.
எ.	தந்தையினிடத்தில் — யின்கண்.	தந்தைகளிடத்தில்.
அ.	தந்தையே.	தந்தைகளே.

64. — அது, இது, எது, யாது என்னும் அஃறிணை ஒருமைப் பெயர்களும், அவை, இவை, எவை, யாவை என்னும் பன்மைப் பெயர்களும் எவ்வாறு வேற்றுமைப்படும் ?

ஒருமைப் பெயர்கள் அன் சாரியையும், இன் சாரியையும், பன்மைப் பெயர்கள் அற்றுச் சாரியையும் பெறும்.

(உதாரணம்.)

ஒருமை.		பன்மை.
க.	அது.	அவை, அவைகள்.
உ.	அதனை.	அவற்றை, அவைகளை.
௩.	அதனால்.	அவற்றால், அவைகளால்.

65. — நான் என்னும் தன்மை ஒருமைப் பெயரும், நாம், நாங்கள் என்னும் தன்மைப் பன்மைப் பெயர்களும் எவ்வாறு வேற்றுமைப் படும்?

இரண்டாவது முதலான வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது, நான், யான் என்பவை என் எனவும், நாம் என்பது நம் எனவும், எம் எனவும், நாங்கள் என்பது எங்கள் எனவும் திரியும்.

(உதாரணம்.)

ஒருமை.		பன்மை.
க.	நான், யான்.	நாம், நாங்கள்.
உ.	என்னை.	நம்மை, எம்மை, எங்களை.
௩.	என்னால்.	நம்மால், எங்களால்.

66.—நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயரும், நீர், நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர்களும் எவ்வாறு வேற்றுமைப் படும்?

இரண்டாவது முதலிய வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது, நீ என்பது உன் எனவும், நீர் என்பது உம் எனவும், நீங்கள் என்பது உங்கள் எனவும் திரியும்.

(உதாரணம்.)

	ஒருமை.	பன்மை.
க.	நீ.	நீர், நீங்கள்.
உ.	உன்னை.	உம்மை, உங்களை.
ங.	உன்னால்.	உம்மால், உங்களால்

67.—தான் என்னும் படர்க்கை ஒருமைப் பெயரும், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பன்மைப்பெயர்களும் எவ்வாறு வேற்றுமைப்படும்?

இரண்டாவது முதலிய வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது, தான் என்பது தன் எனவும், தாம் என்பது தம் எனவும், தாங்கள் என்பது தங்கள் எனவும் திரியும்.

(உதாரணம்.)

ஒருமை.		பன்மை.
க.	தான்.	தாம், தாங்கள்.
உ.	தன்னை.	தம்மை, தங்களை.
௩.	தன்னால்.	தம்மால், தங்களால்.

II. வினையியல்

68. — வினைச்சொல்லில் எவைகளை அறிய வேண்டும்?

வினைச்சொல்லில் பகுதி, விகுதி, மூவிடம், ஐம்பால், காலம், ஏவல், வியங்கோள், ஈறெச்சம், எதிர்மறை, தொழிற்பெயர் இப்பத்தினையும் அறியவேண்டும்.

69. — இவற்றுள் பகுதி ஆவது என்ன?

வினைச்சொல்லில் முதனிலையாய் நிற்கும்பகாப்பதங்களே பகுதிகளாம்.

(உ-ம்.) நடந்தான், படித்தான். இவைகளில் நட, படி என்பவை பகுதிகளாம்.

70. — விகுதி ஆவது என்ன?

திணையையும் பாலையும் இடத்தையும் காண்பித்து, வினைச்சொல்லின் ஈற்றிலே நிற்பதே விகுதி என்பதாம்.

	(உ–ம்.)			விகுதி.	பகுதியும், விகுதியும்.
உயர்திணை.	ஒருமை.		தன்மை.	ஏன்.	வந்தேன்.
			முன்னிலை.	ஆய்.	வந்தாய்.
	பன்மை.		தன்மை.	ஓம்.	வந்தோம்.
			முன்னிலை.	ஈர், ஈர்கள்.	வந்தீர், வந்தீர்கள்.
	ஆண்பால்.		படர்க்கை.	ஆன், அன்.	வந்தான், வந்தனன்.
	பெண்பால்.		படர்க்கை.	ஆள், அள்.	வந்தாள், வந்தனள்.
	பலர்பால்.		படர்க்கை.	ஆர், அர்.	வந்தார், வந்தனர்.
அஃறிணை.	ஒன்றன்பால்.		படர்க்கை.	து.	வந்தது.
	பலவின்பால்.		படர்க்கை.	அ.	வந்த, வந்தன.

இவ்விகுதிகளோடு வழங்குகிற வினைச்சொல் வினைமுற்றென்னப்படும்.

71. — காலம் ஆவது எத்தனை வகையாம்?

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகையாம். இவை பகுதி விகுதி இரண்டிற்கும் நடுவே வரும் இடைநிலைகளால் பெரும்பாலும் குறிக்கப்படும்.

72. — இறந்தகாலத்தைக் காட்டும் இடைநிலைகள் எவை?

த், ட், ற் இம்மூன்று மெய்யெழுத்துக்களும், இன் என்பதும் இறந்தகாலத்தைக் குறிக்கும் இடைநிலைகளாம்.

(உதாரணம்.)

பகுதி.	இடைநிலை.	விகுதி.	வினைமுற்று.
படி,	த்,	ஏன்,	படித்தேன்.
காண்,	ட்,	ஏன்,	கண்டேன்.
செல்,	ற்,	ஏன்,	சென்றேன்.
அனுப்பு,	இன்,	ஏன்,	அனுப்பினேன்.

73.—நிகழ்காலத்தைக் குறிக்கும் இடைநிலைகள் எவை?

கிறு, கின்று, ஆநின்று இம்மூன்றும் நிகழ்காலத்தைக் குறிக்கும் இடைநிலைகளாம்.

(உதாரணம்.)

பகுதி.	இடைநிலை.	விகுதி.	வினைமுற்று.
படி,	கிறு,	ஏன,	படிக்கிறேன்.
போ,	கின்று,	ஆன்,	போகின்றான்.
நட,	ஆநின்று,	ஓம்,	நடவாநின்றோம்

74.—எதிர்காலத்தைக் குறிக்கும் இடைநிலைகள் எவை?

ப், வ், இவ்விரண்டொற்றும்எதிர்காலத்தைக் குறிக்கும் இடைநிலைகளாம்.

(உதாரணம்.)

பகுதி.	இடைநிலை.	விகுதி.	வினைமுற்று.
படி,	ப்,	ஏன்,	படிப்பேன்.
செய்,	வ்,	ஏன்,	செய்வேன்.

75.— இம்மூன்றுகால இடைநிலைகளும் விகுதிகளோடே வழங்குகிற அட்டவணையைச் சொல்லு.

(உதாரணம்.)

		நிகழ்காலம்.	இறந்தகாலம்.	எதிர்காலம்.
ஒருமை.	நான்	படிக்கிறேன்.	படித்தேன்.	படிப்பேன்.
	நீ	படிக்கிறாய்.	படித்தாய்.	படிப்பாய்.
	அவன்	படிக்கிறான்.	படித்தான்.	படிப்பான்.
	அவள்	படிக்கிறாள்.	படித்தாள்.	படிப்பாள்.
	அது	படிக்கிறது.	படித்தது.	படிப்பது.
பன்மை.	நாம்	படிக்கிறோம்.	படித்தோம்.	படிப்போம்.
	நீர்	படிக்கிறீர்.	படித்தீர்.	படிப்பீர்.
	நீங்கள்	படிக்கிறீர்கள்.	படித்தீர்கள்.	படிப்பீர்கள்.
	அவர்	படிக்கிறார்.	படித்தார்.	படிப்பார்.
	அவர்கள்	படிக்கிறார்கள்	படித்தார்கள்.	படிப்பார்கள்.
	அவை	படிக்கின்றன.	படித்தன.	படிப்பன.

☞ உம் விகுதியை ஈற்றிற் பெற்றுவரும் செய்யும் என்னும் முற்று எதிர்காலத்தைக் காட்டிக்கொண்டு, அஃறிணை ஒருமை பன்மைகளில் பெரும்பாலும் வரும்.

(உ—ம்.) அது படிக்கும், அவை படிக்கும்.

76. — ஏவல் ஆவது என்ன ?

ஏவலாவது கட்டளைப்பொருளுள்ள முற்றுச்சொல்லேயாம்; அது முன்னிலையிடத்தைமாத்திரம் பெறும், வினைச்சொல்லின் பகுதியே ஒருமை யேவலாம்; அதனோடு உம் விகுதியாவது உம்மோடே கள் விகுதியாவது புணர்ந்தால் பன்மை ஏவலாம்.

(உ-ம்.) படி, படியும், படியுங்கள்.

77. — வியங்கோள் ஆவது என்ன ?

வியங்கோள் ஆவது இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் உரித்தாய் மரியாதையாய் ஏவும் ஏவல் வினைமுற்றுச் சொல்லேயாம்.

(உதாரணம்.)

ஒருமை.	நான்	வாழ்க	வாழ்வேனாக	செய்யக்கடவேன்.
	நீ	வாழ்க	வாழ்வாயாக	செய்யக்கடவாய்.
	அவன்	வாழ்க	வாழ்வானாக	செய்யக்கடவன்.
	அவள்	வாழ்க	வாழ்வாளாக	செய்யக்கடவள்.
	அது	வாழ்க	வாழ்வதாக	செய்யக்கடவது.
பன்மை.	நாம்	வாழ்க	வாழ்வோமாக	செய்யக்கடவோம்.
	நீர்	வாழ்க	வாழ்வீராக	செய்யக்கடவீர்.
	நீங்கள்	வாழ்க	வாழ்வீர்களாக	செய்யக்கடவீர்கள்.
	அவர்கள்	வாழ்க	வாழ்வார்களாக	செய்யக்கடவர்கள்.
	அவை	வாழ்க	வாழ்வனவாக	செய்யக்கடவன.

78.— எச்சம் என்பதென்ன ?

எச்சம் என்பது குறைவு; அது வினையெச்சம் எனவும் பெயரெச்சம் எனவும் இருவகையாம்.

79. — வினையெச்சம் என்பன எவை ?

முக்காலத்து வினைமுற்றுகளைக் கொண்டு முடிவன வினையெச்சமாம்; வினையெச்சங்கள் மூன்றும்.

(உ–ம்.) (க) படித்து, வந்து, சொல்லி, விட்டு என்பவை இறந்தகால வினையெச்சமாம்.

(உ) படித்தால், வந்தால், சொன்னல், விட்டால், படிக்கின், வரின், சொல்லின், விடின் என்பவை எதிர்கால வினையெச்சமாம்.

(ங) படிக்க, வர, சொல்ல, விட என்பவை முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சமாம்.

80. — பெயரெச்சம் என்பன எவை ?

பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சமாம்; பெயரெச்சம் மூவகையாம்.

(உ–ம்.) படித்த என்றாற்போல்வன இறந்தகாலப் பெயரெச்சமாம்.

படிக்கிற என்றாற்போல்வன நிகழ்காலப் பெயரெச்சமாம்.

படிக்கும் என்றாற்போல்வன எதிர்காலப் பெயரெச்சமாம்.

81. — எதிர்மறை ஆவது என்ன ?

தொழிலை மறுக்கிற வினைச்சொல்லே எதிர்மறை என்னப்படும்.

இடைநிலையின்றிப் பகுதியும் விகுதியும் புணர்ந்துவருவது முக்காலத்துக்கும் பொதுவான எதிர்மறைவினைமுற்றும்.

(உதாரணம்.)

ஒருமை.		பன்மை.	
நான்	படியேன்.	நாம்	படியோம்.
நீ	படியாய்.	நீர்	படியீர்.
		நீங்கள்	படியீர்கள்.
அவன்	படியான்.	அவர்	படியார்.
அவள்	படியாள்.	அவர்கள்	படியார்கள்.
அது	படியாது.	அவை	படியா.

எதிர்மறை வினையெச்சமாவன:

படியாமல், படியாது என வருவனவாம்.

எதிர்மறைப் பெயரெச்சமாவன:

படியாத, செய்யாத என வருவனவாம்.

எதிர்மறை ஏவலாவது:

ஒருமையில் படியேல் எனவும், பன்மையில் படியன்மின் எனவும் வருவனவாம்.

82. — தொழிற்பெயர் என்பன எவை?

தல், அல், கை என்பவை வினைப் பகுதியோடே புணர வருஞ்சொற்கள் தொழிற்பெயராம்.

(உ-ம்.) செய்தல், செயல், செய்கை, படித்தல், ஈகை.

மை என்பது இறந்தகால நிகழ் கால இடைநிலைகளோடே புணரவருஞ் சொற்களும் தொழிற்பெயராம்.

(உ-ம்.) படிக்கின்றமை, படித்தமை. சொல்லுகின்றமை, சொன்னமை.

ஆமை என்பது வினைப்பகுதியோடே புணரவருஞ் சொற்கள் எதிர் மறைத் தொழிற்பெயராம்.

(உ-ம்.) படியாமை, கொடாமை.

83. — வினையாலணையும் பெயர்கள் எவை?

முன்பு ஒரு பொருளின் தொழிலை உணர்த்து முற்றுவினைச் சொல்லா யிருந்து, பின்பு அப்பொருளுக்குப் பெயராய் வருவது வினையாலணையும் பெயராம். அது ஈறுதிரிந்தும் திரியாதும் வரும்.

(உதாரணம்.)

	நிகழ்காலம்.	இறந்தகாலம்.	எதிர்காலம்.
ஆண்பால்	படிக்கிற வன்	படித்தவன்	படிப்பவன்
பெண்பால்	படிக்கிற வள்	படித்தவள்	படிப்பவள்.
பலர்பால்	படிக்கிற வர்கள்	படித்தவர்கள்	படிப்பவர்கள்
ஒன்றன்பால்	படிக்கிற து	படித்தது	படிப்பது.
பலவின்பால்	படிக்கிற வை	படித்தவை	படிப்பவை.

III. இடைச்சோல்லியல்

84. — இடைச்சொற்கள் எத்தனை வகையாம்?

வேற்றுமை உருபுகளும், வினை உருபுகளும், சாரியைகளும், உவமைச் சொற்களும், தத்தம் பொருளைக்காட்டிய சொற்களும், இசை நிறைக்கிற சொற்களும், அசை நிறைக்கிற சொற்களும், குறிப்பின் வருகிறசொற்களும் என இடைச்சொற்கள் எட்டு வகையாம்.

85. — சாரியைகள் எத்தனை?

அன், ஆன், இன், அல், அற்று, முற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் இப்பதினேழும் சாரியைகளாம்.

(உ-ம்.) மூன்று + கால் = மூன்றேகால், என்பதில் ஏ சாரியை வந்தது.

மனிதன் + கு = மனிதனுக்கு, என்பதில் உ சாரியை வந்தது.

86. — உவமைச்சொற்கள் எவை?

போல, ஒப்ப, நேர, நிகர, படி முதலியவை உவமைச் சொற்களாம்.

(உ-ம்.) இதைப்போல; அதற்கொப்ப.

87. — தத்தம் பொருளைக் காட்டிய இடைச்சொற்கள் எவை?

ஏ, ஓ, உம், என, என்று, என்பவன், ஆனவன், என்பது, ஆனது, ஆவது, ஆ, முன், பின், கீழ், மேல், என்று, எனு, அந்தோ முதலியவை தத்தம் பொருளைக் காட்டிய இடைச்சொற்களாம்.

88. — ஏகாரம் எத்தனை பொருளைத் தரும்?

ஏ அறுவகைப் பொருளைத் தரும்; அவையாவன:

(௫) தேற்றம். (உ-ம்.) சன்மார்க்கருக்கே புகழ்.
(௬) எண் (உ-ம்.) நிலமே, சலமே, தீயே, வளியே.
(௩) வினா. (உ-ம்.) நீயே தந்தாய்?
(௪) பிரித்தல். (உ-ம்.) அவனே தந்தான்.
(௫) ஈற்றசை. (உ-ம்.) பகர்ந்தனனே.
(௬) இசைநிறை. (உ-ம்.) ஏயேயிவளொருத்தி.

89.—ஓகாரம் எத்தனை பொருளைக் காட்டும்?

ஓ எட்டுப் பொருளைக் காட்டும்; அவையாவன:

(க) பிரித்தல். (உ-ம்.) அவனோ செய்தான்.
(உ) ஒழியிசை. (உ-ம்.) வேலைசெய்யவோ போகிறாய்.
(௩) எதிர்மறை. (உ-ம்.) நானோ சொன்னேன்.
(௪) வினா. (உ-ம்.) அவனோ பேசினான்?
(௫) தெரிநிலை. (உ-ம்.) நன்றோவன்று, தீதோவன்று.
(௬) கழிதல். (உ-ம்.) நைதலின்றி நல்லறஞ் செய்தாலோ உயிருய்யும்.
(௭) சிறப்பு. (உ-ம்.) ஓ ஓ பெரியன்.
(௮) அசைநிலை. (உ-ம்.) ஓ ஓ உவமன்.

90.—உம் என்பது எத்தனை பொருளைக் காட்டும்?

உம் என்பது எட்டுப் பொருளைக் காட்டும்; அவையாவன:

(க) எதிர்மறை.	(உ-ம்.) வருதலும் தீது.
(உ) எச்சம்.	(உ-ம்.) சாத்தனும் வந்தான்.
(௩) முற்று.	(உ-ம்.) தமிழ்நாட்டுமூவேந்தரும் வந்தார்கள்.
(௪) எண்.	(உ-ம்.) பொன்னும், வெள்ளியும், ஈயமும்
(௫) சிறப்பு.	(உ-ம்.) குறவருமருளுங்குன்றம்.
(௬) ஐயம்.	(உ-ம்.) பத்தானும், எட்டானும்.
(௭) ஆக்கம்.	(உ-ம்.) பாலுமாயிற்று.
(௮) தெரிநிலை.	(உ-ம்.) ஆணுமன்று, பெண்ணுமன்று.

91.—என, என்று இவ்விரண்டும் எத்தனை பொருளைத் தரும்.

என, என்று ஏழு பொருளைத் தரும்; அவையாவன :

(க) உவமை.	(உ-ம்.) கொடும்புலி பாய்ந்தெனப் பாய்ந்தான்.
(உ) எண்.	(உ-ம்.) ஒன்றென, இரண்டென; அன்றியும் என்று, என இவ்விரண்டும் இவ்வாறு வழங்கும்.
(௩) குணம்.	(உ-ம்.) வெள்ளென விளங்கிற்று.
(௪) வினை.	(உ-ம்.) கொள்ளெனக் கொண்டான்.
(௫) பெயர்.	(உ-ம்.) உறையூரென்று சொல்லப்படுவது.
(௬) இசை.	(உ-ம்.) ஒல்லென ஒலித்தது.
(௭) குறிப்பு.	(உ-ம்.) பொள்ளென வந்தான்.

92. — என்பவன், ஆனவன், என்பது, ஆனது, ஆவது எவ்வாறு வழங்கும்?

என்பவன், ஆனவன் இரண்டும் உயர்திணைப் பெயரோடும்; என்பது, ஆனது, ஆவது மூன்றும் அஃறிணைப் பெயரோடும்; இடைச்சொல்லாய்ப் பொருளின்றி அடுத்து நிற்கும்.

(உ-ம்.) சாத்தனென்பவன், சாத்தனானவன், தோட்டமென்பது, தோட்டமானது, தோட்டமாவது.

VI. உரிச்சொல்லியல்

93. — உரிச்சொல் எத்தனை வகையாம்?

பெயருரிச்சொல் என்றும், வினையுரிச்சொல் என்றும் இருவகையாம்.

94. — பெயருரிச்சொல் எவ்வாறாம்?

க. சிலவிடத்துப் பெயரானது உரிச்சொல்லாக வரும்.

(உ-ம்.) நற்சிலை, இதில் நன்மை என்னும் பெயர்ச்சொல் குணத்தைக் காட்டிய உரிச்சொல்லாக வந்தது.

உ. பெயர்ச்சொற்கள் சிலவிடத்து

உள்ள, ஆன என்னும் பண்பை விளக்குமொழிகளோடிணைந்து, உரிச்சொல்லாக நிற்கும்.

(உ—ம்.) அறிவுள்ளமனிதன், செம்மையான புலமை

ந. சில பெயர்கள் ஈறுகெட்டுப் திரிந்தும் உரிச்சொல் ஆகும்.

(உ—ம்.) வட்டம், வட்டக்கல்; சிறுமை, சிறியவீடு.

ச. இயல்பாய் உரிச்சொற்களானவைகளும் சில உண்டு.

(உ—ம்.) நனி, கடி முதலியவாம்.

95.—வினையுரிச்சொல் எவ்வாறும்?

க. சில வினையெச்சங்கள் வினையுரிச்சொற்களாக வழங்கும்.

(உ—ம்.) சாலப் பேசினான்.

உ. சில பெயர்ச்சொல்லோடே ஆய் என்னும் வினையெச்சம் புணர்ந்து வினையுரிச்சொல் ஆகும்.

(உ—ம்.) சந்தோஷமாய்ப் பேசினான்.

ந. சில வினைப்பகுதிகளே சிலவிடத்து வினையுரிச்சொல்லாக வழங்கும்.

(உ—ம்.) மிகு, மிகுபொருள்.
உறு, உறுசெயல்.

மூன்றாவது,

சொற்றொடர் அதிகாரம்

96. — சொற்றொடர் என்பது என்ன?

பெயர் முதலான சொற்கள் அர்த்தத்தைத் தந்து, ஒன்றோடொன்று ஒழுங்குபடத் தொடர்ந்து நிற்றலாம்.

97. — வாக்கியம் ஆவது என்ன?

எழுவாயும் பயனிலையும் கூடியது வாக்கியமாம்.

98. — எழுவாய் ஆவது என்ன?

ஒரு வாக்கியத்தின் முதற்பொருள் எழுவாயாம்.

(உ-ம்.) வீடு இடிந்தது: இதில் வீடென்பது வாக்கியத்தின் முதற்பொருளாகிய எழுவாயாம்.

99. — பயனிலை ஆவது என்ன?

வாக்கியத்தின் முதற்பொருளின் செயலைக் காண்பிப்பது பயனிலையாம்.

100. — எழுவாய்க்கும் பயனிலைக்கும் ஊடே அடைமொழிகள் வரப்பெறுமோ?

எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ளே பல அடைமொழிகள் வரும்.

(உ-ம்.) நல்ல மனிதன் தாழ்மையாய் இருப்பான்: இதில் மனிதன் என்பது எழுவாய், இருப்பான் என்பது பயனிலை.

நல்ல, தாழ்மையாய் என்பவை அடைமொழிகள்.

101.—ஓர் எழுவாயும் பல எழுவாயும் ஒரு பயனிலையும் பல பயனிலையும் கொள்ளுமோ?

ஓர் எழுவாயும் பல எழுவாயும் ஒரே பயனிலையும் கொள்ளும், பல பயனிலையும் கொள்ளும். பல பயனிலைகளாகிய வினைகளில் கடைசி வினைமாத்திரம் முற்றுவினையாய் இருக்கும்.

(உ-ம்.) தாயும் தந்தையும் தோட்டத்தில் இருந்தார்கள்: இதில் இரண்டு எழுவாய் ஒரே பயனிலை கொண்டன.

தந்தை பாவஞ்செய்து நிர்ப்பாக்கியனாகி மரணம் அடைந்தான்: இதில் ஒரே எழுவாய் மூன்று பயனிலையையும் கொண்டது.

102.—பயனிலை எழுவாயோடே எவ்வாறு இசைந்து நிற்கவேண்டும்?

பயனிலையாகிய வினைச்சொல் எழுவாயோடே திணை, பால், இடமாகிய

இவைகளில் வேறுபடாமல் இசைந்திருக்கவேண்டும்.

(உ-ம்.)	நான்	வருவேன்
	குதிரை	வந்தது.
	மனிதர்	வந்தார்கள்.

103.—பல எழுவாய் வருங்கால் பயனிலை எவ்வாறு நிற்கும்?

உயர்திணையாகிய பல சொற்கள் எழுவாயாக அடுக்கிவரின், பயனிலை வினை பலர்பாலாக நிற்கும்.

அஃறிணையாகிய பல எழுவாய் வரின், பயனிலை பலவின்பாலாக நிற்கும்.

(உ-ம்.) மனிதனும் ஸ்திரீயும் வந்தார்கள்.
மாமும் கனியும் கெட்டன.

104.—வெவ்வேறு இடத்து எழுவாய் அடுக்கிவரின் முற்றுவினை எவ்வாறு வரும்?

தன்மையிடத்து எழுவாயோடே முன்னிலை படர்க்கையிடத்து எழுவாய் அடுக்கிவரின், முற்றுவினை தன்மையிடத்ததாய் வரும்.

முன்னிலையிடத்து எழுவாயோடே படர்க்கையிடத்து எழுவாய் அடுக்கி

வரின், முற்றுவினை முன்னிலையிடத்த தாய் வரும்.

(உ-ம்) நானும் நீயும் அவனும் போனோம்.
நீயும் அவனும் போனீர்கள்.

105. — சந்தேகப்பொருளை எவ்வாறு அடுக்கிச் சொல்லவேண்டும்.

க. அவனோ, இவனோ, எவன் வந்தான் என எழுவாயோடே ஓகாரத்தைப் புணர்த்திப் பின்பு வினைச்சொல் கூறவேண்டும்.

உ. அவனாவது, இவனாவது, வருவான்; அகந்தையானாலும் கோபமானாலும் மனிதர்களுக்குத் தகாது; வீட்டையாயினும் நிலத்தையாயினும் கொடுப்பான்; என ஆவது, ஆனாலும், ஆயினும் என்னுஞ் சொற்களைப் புணர்த்தி அடுக்கிச் சொல்லவேண்டும்.

106. — இரண்டாம் வினையெச்சம் சந்தேகப் பொருளில் எந்தக் காலத்து வினையைக் கொள்ளும்?

எதிர்கால வினைமுற்றைக் கொள்ளும்.

(உ-ம்.) அவன் வந்தால் காரியம் நடக்கும்
இப்படிச் செய்தால் நன்மை உண்டாகும்

107.—மூன்றும் வினையெச்சம் எவ்வெப் பொருளைத் தரும்?

க. பொருட்டுப் பொருளைத் தரும்.

(உ-ம்.) அவன் சொல்லப் போனான்: இதில் சொல்ல என்பது சொல்லும் பொருட்டு எனப் பொருட்டுப்பொருளைத் தந்தது.

உ. முக்காலப் பொருளையும் தரும்.

(உ-ம்.) அவர் சொல்ல ஆகும்.
ஒளி வர இருள் போயிற்று.
அப்படி இருக்க நாம் போகவேண்டும்.

ந. வியங்கோட் பொருளைத் தரும்.

(உ-ம்.) 'ஐயா, வர.' இதில் வர என்பது வருக என்னும் பொருளைத் தந்தது.

ச. காரணப் பொருளைத் தரும்.

(உ-ம்.) 'அவன் கேட்க நான் கொடுத்தேன்.'

108.—ஆக என்னும் வினையெச்சம் நான்காம் வேற்றுமை உருபோடே எப்பொழுது புணரும்?

ஆக என்பது பொருட்டுப் பொருளைக் காண்பிக்கிறபொழுது, நான்காம் வேற்றுமையோடு புணரும்.

(உ-ம்.) அதற்காக வந்தான்.

109.—முதலாம் வினையெச்சம் உம் என்பதைப் பெற்ருல் எப்பொருளைத் தரும்?

முதலாம் வினையெச்சம் உம் பெற்ருல் உண்மையோடே நிச்சயப்பொருளையும் எண்பொருளையும் தரும்.

(உ–ம்.) 'நான் சொல்லியிருந்தும் அவன் செய்யவில்லை.' இதில் நிச்சயப்பொருளைத் தந்தது.
'அவர்கள் கூக்குரலிட்டும் அடித்தும் குத்தியும் வந்தார்கள்.' இதில் எண்பொருளைத் தந்தது.

110.—இரண்டாம் வினையெச்சம் உம் என்பதைப் பெற்ருல் எவ்வாறும்?

இன்மையோடே நிச்சயப்பொருளாய் எதிர்கால முற்றுவினையைக் கொள்ளும்.

(உ–ம்.) நான் சொன்ஞலும் அவன் போகமாட்டான்.

111.—பெயரெச்சம் தன்னை முடிக்கும் பெயரோடு எவ்வாறு வரும்?

க. பெயரெச்சமானது தன்னை முடிக்கும் பெயருக்கு அடைசொல்லாக வரும்.

(உ–ம்.) படித்த பையன், சிறந்த மகிமை.

உ. பெயரெச்சமானது தனித்து வருவதுமல்லாமல். ஒன்றாய் பலவு

மான அடைமொழிகளோடேயும் வரும்.

(உ-ம்.) வாக்கியத்தில் அடங்கியிருக்கிற பொருள் அவனுக்குத் தெரியாது.

௩. அநேகம் பெயரெச்சங்கள் ஒரே பெயரைச் சேர்ந்தால் கடைசி எச்சந்தவிர முந்தின எச்சங்களெல்லாம் முதல் வினையெச்சமாகத் திரியும்.

அன்றியும் தெளிவின் பொருட்டு முந்தின பெயரெச்சங்கள் வினையால் அணையும் பெயராகத் திரிதலும் உண்டு.

(உ-ம்.) 'அநேகம் மனிதரைக் காப்பாற்றி, மிகுந்த சத்திரங்களையும் கட்டி, யாவருக்கும் அன்பாய் நடந்துவந்த துரை இறந்துபோனார்;'

அல்லது,

'அநேகம் மனிதரைக் காப்பாற்றினவரும், அநேக சத்திரங்களைக் கட்டினவரும், யாவருக்கும் அன்பாய் நடந்தவருமாய் இருந்த துரை இறந்துபோனார்.'

112.—இடைப்பிறவரலாய் வாக்கியங்கள் வருமோ?

வரும்; ஒரு வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் பல அடைமொழிகளுமுள்ள வேறொரு வாக்கியம் வந்தால், அது என்று என்பதினால் பிரிக்கப்பட்டு முதல் எழுவாயையும் பய

னிலையையுந் தழுவி, இடைப்பி[illegible]வா லாய் வந்த வாக்கியம் என்னப்படு[illegible]

(உ—ம்.) சேவகன் வந்து, கள்ளர் சில பொருள்க ளைக் கொண்டுபோனார்கள் என்றும், அடுத்த ஊரிலே ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும், அறிவி[illegible] தான் என்பதில், கள்ளர் சில பொருள்களைக் கொண்டு போனார்கள் என்ற வாக்கியமும், அடுத்த ஊரிலே ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற வாக்கியமும் இடைப்பிறவரலாய் வந்த வாக்கியங்களாம்.

113.—தொழிற்பெயர் எத்தன்மையாய் வரும்.

தொழிற்பெயரானது பெயர்ச்சொல் வினைச்சொல் இரண்டினது தன்மை யையும் பெற்று வரும்.

(உ—ம்.) 'தீயோரைக் காண்பதும் தீதே.'
'சொல்லுதல் யார்க்கும் எளிதாம்.'
'சொல்லியவண்ணம் செய்யல் அரிதாம்.'

114.—முக்காலத்தும் நிகழும் வினையை எக்காலத்தில் கூறவேண்டும்?

நிகழ்காலத்தில் கூறவேண்டும்.

(உ—ம்.) கடவுள் எங்கும் இருக்கிறார்.

115.—நிகழ்கால வினையும் இறந்தகால வினையும் எதிர்காலத்தையும் குறிக்குமா?

விரைவினாலே நிகழ்கால வினையும் இறந்தகாலவினையும் எதிர்காலத்தைக் குறிக்கும்.

(உ-ம்.) 'வருகிறேன்' எ-து சீக்கிரமாய் வருவேன் என்றும் அர்த்தங்கொடுக்கும்.
'நான் சாப்பிட்டாயிற்று' எ-து நான் சாப்பிடுகிறது சீக்கிரமாய் ஆகும் என்றும் அர்த்தங்கொடுக்கும்.

116.— இறந்தகாலவினை இன்னும் எவ்விடத்து எதிர்காலத்தைக் குறிக்கும்?

நிச்சயப் பொருளில் இறந்தகாலவினை வருங்காலத்தைக் காட்டும்.

(உ-ம்.) அப்படிச் செய்தாயேயானால் செத்தாய்; எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது,—என்பவைகளில் நிச்சயமாய்ச் சாவாய் என்றும், நிச்சயமாய்ப் பெய்யும் என்றும் பொருள் கொள்ளப்படும்.

117.— எதிர்காலத்து வினை நிகழ்காலத்தையும் இறந்தகாலத்தையும் காட்டுமா?

எதிர்கால வினை காரணமில்லாமல் இயல்பாகவே நிகழ்காலத்தையும் இறந்தகாலத்தையும் காட்டும்.

(உ-ம்.) 'அவன் இன்று தருமம் கொடுப்பான்; முன்னோர்கள் பல காரியங்களைச் சொல்வார்கள்.— இவைகளிலே கொடுப்பான் என்பது கொடுக்கிறான் எனவும், சொல்வார்கள் என்பது சொன்னார்கள் எனவும், பொருள்தருதல் காண்க.

முற்றும்.

ரு-

விலைக்கு வாங்கப்படும் புத்தகங்கள்

வேதத்துக்கடுத்த புத்தகங்கள்.

முதலாம் வேதோபதேச வினவிடை ; ௩ பை.
பழைய ஏற்பாட்டிலுள்ள கதைகள் ; ௧ அணா ௪ பை
புதிய ஏற்பாட்டிலுள்ள கதைகள் ; ௨ அணா.
ஞானபத கீர்த்தனைகள் ; ௰ அணா.

வாசிப்பு புத்தகங்கள்

முதற் பாடம் ; ௯ பை.
முதல் வாசக புத்தகம் ; ௧ அணா ௯ பை.
இரண்டாம் வாசக புத்தகம் ; ௨ அணா.
மூன்றாம் வாசக புத்தகம் ; ௨ அணா.
நாலாம் வாசக புத்தகம் ; ௨ அணா.
முதற் பாரப் புத்தகம் ; ௨ அணா ௯ பை.
இரண்டாம் பாரப் புத்தகம் ; ௩ அணா.
மூன்றாம் பாரப் புத்தகம் ; ௪ அணா.
நான்காம் பாரப் புத்தகம் ; ௯ அணா
ஐந்தாம் பாரப் புத்தகம் ; ௮ அணா.

கதா வாசக புஸ்தகங்கள்.

முதலாவது கதா வாசக புஸ்தகம் ; ௨ அணா.
இரண்டாவது கதா வாசக புஸ்தகம் ; ௨ அணா ௯ பை.
மூன்றாவது கதா வாசக புஸ்தகம் ; ௩ அணா.
நான்காவது கதா வாசக புஸ்தகம் ; ௪ அணா.
ஐந்தாவது கதா வாசக புஸ்தகம் ; ௫ அணா.

வித்தியா மாலிகை.

பாலபாடம்; ௯ பை.
முதற் புத்தகம்; ௧ அணா ௯ பை.
இரண்டாம் புத்தகம்; உ அணா.
மூன்றாம் புத்தகம்; உ அணா ௬ பை.
நான்காம் புத்தகம்; உ அணா ௬ பை.
ஐந்தாம் புத்தகம் (தயாராகிறது)
ஆத்திசூடி மூலமும் உரையும்; ௬ பை.
கொன்றைவேந்தன் ,, ௬ பை.
வெற்றிவேற்கை ,, ௬ பை.
நல்வழி ,, ௬ பை.
மூதுரை ,, ௬ பை.
நீதிநெறிவிளக்கம் ,, ௧ அணா ௬ பை.
நூறு குறள்: ௧ அணா ௬ பை.
பழமொழிகள் ௯ பை.

இலக்கண புத்தகங்கள்.

இலக்கணச் சுருக்கம் முதற் புத்தகம்; ௧ அணா ௬ பை.
இலக்கண வினாவிடை முதற் புத்தகம்; ௧ அணா,
இலக்கண வினாவிடை இரண்டாம் புத்தகம்; உ அணா.

பூகோள சாஸ்திர புத்தகங்கள்.

சென்னை இராஜதானி பூமிசாஸ்திரம்; ௬ அணா.
ஆசியா பூமிசாஸ்திரம்; ௬ அணா.

சரித்திர புத்தகம்

இந்துதேச சரித்திரம்; ௰௨ அணா.

C. L. S. PRESS, MADRAS—1915